**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 443/2016</u>**

**<u>வழக்கு சாட்சி PW-6</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கபாண்டியன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | பால் வியாபாரம் |
| கிராமம் | : | சுந்தரேசபுரம் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 08th, 2026.

**(1, 3 எதிரிகள் ஆஜர். இதர எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சுந்தரேசபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது பால் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 15.02.2013 ம் தேதி நானும், எனது மகனும் பால் வியாபாரத்திற்காக சென்று விட்டோம். நான் அமுதம் ேஹாட்டலுக்கு பால் கொண்டு போய்விட்டு இரவு 09.00 மணிக்கு தான் வழக்கமாக வீட்டிற்கு வருவேன். நான் இரவு 08.50 மணியளவில் அமுதம் ேஹாட்டலில் அன்றைய தினம் நான் நின்று கொண்டிருக்கும் போது, எனது மகன் முகேஷ் எனக்கு போன் மூலமாக தனது தாத்தாவையும், மாமாவையும் எதிரிகள் இசக்கிபாண்டி, சுப்பையாபாண்டி, திருமலைக்குமார், கணேசமூர்த்தி, மற்றொரு சுப்பையாபாண்டி, சிங்கத்துரை மொத்தம் 8 பேர்கள் மட்டை மற்றும் கம்பி வைத்து அடித்து விட்டதாக என்னிடம் தகவல் சொன்னார்.

நான் போகநல்லூர் அகதிகள் முகாமிற்கு அருகில் வந்துகொண்டிருக்கும் போது எனது மகனும், தமிழ், சீதா, சரவணன் ஆகியோர்கள் காயம்பட்ட ராஜேந்திரனையும், மருதையாபாண்டியனையும் காரில் சிகிச்சைக்காக கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். நான் எனது மகனிடம் எனது வண்டியை கொடுத்து விட்டு, நான் அவர்களுடன் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு காரில் சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நானும் உடன் சென்றேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.10 11:48:11 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 443/2016</u>**

**<u>வழக்கு சாட்சி PW–7</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செந்தூர்பாண்டியன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | சுந்தரேசபுரம் | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 08th, 2026.

**(1, 3 எதிரிகள் ஆஜர். இதர எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சுந்தரேசபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். 16.02.2013ம் தேதி, காலை 10.00 மணிக்கு போலீசார் சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு மேப் போட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், முருகன் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சி மருதையாபாண்டியன் எனக்கு மாமா உறவுமுறை. அவர் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றாலும், வழக்கின்

பிரிவு என்ன என்று எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் அங்கு விசாரித்து கொண்டிருந்தார்கள், என்னையும் கேட்டார்கள். சாட்சி மருதையாபாண்டியன் என்னுடைய மாமா என்பதினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.10 11:48:19 +0530